இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 63 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – புரட்டாசி 27 – திங்கள்கிழமை 13 அக்டோபர் 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 63 : Thiruvalluvar Year - 2056 - Purataasi 27 - Monday 13 October 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## கிராம ஊராட்சிகளின் நிர்வாகம் வெளிப்படையாக இருக்கவேண்டும்!

# கிராமத்தின் வலிமையே மாநிலத்தின் வலிமை!

## கிராமசபைக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் உரை!

**சென்னை, அக்.13 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (11.10.2025) முகாம் அலுவலகத்திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் கிராம ஊராட்சி களில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் காணொலி வாயிலாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில், “கிராம ஊராட்சிகளின் நிர்வாகம் வெளிப்படையாக இருக்கவேண் டும்” என்றும் “கிராமத்தின் வலிமையே மாநிலத் தின் வலிமை” என்றும் குறிப்பிட்டார்..**

முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

நம்முடைய நாட்டின் முதுகெலும்பாக இருப்பது, கிராமங்கள்தான்! அதனால் தான், நம்முடைய தேசத்தந்தை காந்தி அவர்கள், “விடுதலை இந்தியாவின் வலிமை கிராமங்களில்தான் இருக்கிறது” என்று சொன்னதோடு, “இந்தியா கிராமங் களில்தான் வாழ்கிறது” என்று ஆணித்தர மாகச் சொன்னார்.

### கிராம நிர்வாகங்களின் வலிமைக்கு நமது பல்வேறு திட்டங்கள்!

அப்படிப்பட்ட கிராமங்களை முன் னேற்ற வேண்டும் – கிராமப் பொருளாதா ரத்தை வலிமையாக்க வேண்டும் – கிராம நிர்வாகங்கள் வலிமையாக இருக்க வேண்டும் என்று ஜனநாயகப்பூர்வமாகச் சிந்தித்து, நாம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்!

இந்தத் திட்டங்கள்தான் தமிழ்நாட்டின் கிராம ஊராட்சிகளின் மேம்பாட்டுக்கு அடிப்படை! அதனால்தான், நான் எதிர்க்கட் சித் தலைவராக இருந்தபோது, தொடர்ந்து கிராம சபைக் கூட்டங்களில் பங்கெடுத்தேன்.

உங்கள் ஆதரவோடு முதலமைச்சரான பிறகு, இப்போது மூன்றாவது முறையாக கிராம சபைக் கூட்டத்தில் பங்கேற்கிறேன்.

### தமிழ்நாட்டு வரலாற்றில் இதுவே முதல் முறை!

இன்னும் பெருமையோடு சொல்கிறேன்… வேறெந்த முதலமைச்சரும் இப்படி கிராம சபைக் கூட்டங்களில் பங்கேற்றதில்லை! அதிலும், தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இவ்வளவு பெரிய அளவில், 10 ஆயிரத்துக் கும் மேற்பட்ட ஊராட்சிகளையும் இணைய வசதி மூலமாக இணைத்து, கிராம சபைக் கூட்டத்தை நடத்துவது இதுதான் முதல்முறை!

இதைச் சாத்தியப்படுத்திய தகவல்தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன்அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் அதிகாரிகளுக் கும் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

### அமைச்சர் ஐ.பெரியசாமிக்கு பாராட்டுகள்! வாழ்த்துகள்!

அதேபோல, நம்முடைய ஜனநாயக அமைப்பின் அடித்தளமான கிராமங்களை உயர்த்த பணியாற்றிவரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர் களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறையின் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, அவர்களுக்கும், பொன்னையா உள்ளிட்ட அரசு அலுவலர்களுக்கும் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

என்றைக்கும் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றும் இந்த எண்ணத்தை நமக்குள் விதைத்தவர், தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள்! அவர்தான், “மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர் களுக்குச் சேவை செய்” என்று நமக்குக் கட்டளையிட்டு, நம்மையெல்லாம் ஆளாக் கியவர்!

பேரறிஞர் அண்ணா காட்டிய பாதை யில்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் போன்ற உயர்ந்த இலட்சியங்களைச் செயல் படுத்துவதை நோக்கமாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகளை வழி நடத்தினார்.

தலைவர் கலைஞரின் வழித்தடத்தில் தான், நம்முடைய திராவிட மாடல் அரசும் பல்வேறு முன்னெடுப்புகளைச் செயல் படுத்தி, சமத்துவம், சமதர்மம் மற்றும் சமூகநீதியை நிலைநாட்டி வருகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (11.10.2025) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி (Video Conference) வாயிலாக கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். காணொலி வாயிலாக நடைபெற்ற இக்கூட்டங்களில், மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களும், முகாம் அலுவலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



**என்றைக்கும் மக்களோடு மக்களாக இருந்து பணியாற்றும் இந்த எண்ணத்தை நமக்குள் விதைத்தவர், தமிழ்நாட்டின் தலைமகனான பேரறிஞர் அண்ணா அவர்கள்! அவர்தான், “மக்களிடம் செல், அவர்களுடன் வாழ், அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களை நேசி, அவர்களுக்குச் சேவை செய்” என்று நமக்குக் கட்டளையிட்டு, நம்மையெல்லாம் ஆளாக்கியவர்!**

**பேரறிஞர் அண்ணா காட்டிய பாதையில்தான், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சமூகநீதி, சமத்துவம், சமதர்மம் போன்ற உயர்ந்த இலட்சியங்களைச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிகளை வழி நடத்தினார்.**

**தலைவர் கலைஞரின் வழித்தடத்தில்தான், நம்முடைய திராவிட மாடல் அரசும் பல்வேறு முன்னெடுப்புகளைச் செயல்படுத்தி, சமத்துவம், சமதர்மம் மற்றும் சமூகநீதியை நிலைநாட்டி வருகிறது.**

---

# 12,480 ஊராட்சிகளில் கிராம சபைக் கூட்டங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரை நேரடி ஒளிபரப்பு!

**சென்னை, அக். 13 -**

**12,480 ஊராட்சிகளில் கிராம சபை கூட்டம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காணொலி வாயிலாகக் கலந்து கொண் டார். இக்கிராம சபைக் கூட்டங்களில் மக் கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான மூன்று அத்தியாவசியத் தேவைகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டன.**

கிராமப்புற மக்கள் தங்களின் உரிமை களை அறிந்திடவும், தங்களின் தேவை களை கோரி பெறுவதற்காகவும், ஒவ்வொரு ஆண்டும், தமிழ்நாட்டில் ஆறு முறை கிராமசபைக் கூட்டம் நடத்தப்படுகிறது. மேலும், சில நேரங்களில் சிறப்பு கிராம சபை கூட்டங்களும் நடத்தப்படும். அதன் படி, ஜனவரி 26, மார்ச் 22, மே 1, ஆகஸ்ட் 15, அக்டோபர் 2 மற்றும் நவம்பர் 1 ஆகிய தேதிகளில் கிராம சபைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுவருகிறது.

தமிழ்நாட்டின் ஊரக உள்ளாட்சிகளில் மிக முக்கிய ஜனநாயக நிகழ்வாகக் கருதப் படும் கிராம சபைக் கூட்டங்கள், மாநிலம் முழுவதும் உள்ள 12,480 ஊராட்சிகளில் நேற்று முன்தினம் (11.10.2025) காலை 11.00 மணியளவில் சிறப்பாக நடைபெற்றன.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முகாம் அலுவலகத்திலிருந்து காணொலி (Video Conference) வாயிலாக கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

முதலமைச்சர் அவர்கள் தனது உரை யில், கிராம சபைகள் மக்களாட்சியின் அடிப் படை முக்கியத்துவம் வாய்ந்தது என வலி யுறுத்தி, மக்களின் தேவைகள், சமூக நீதி, சமத்துவம் ஆகியவற்றை முன்னிறுத்தி ஊரக வளர்ச்சி திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில், செங்கல்பட்டு மாவட்டம் – கோவளம் ஊராட்சி, தென்காசி மாவட்டம் – முள்ளிக்குளம் ஊராட்சி ஆகிய ஊராட்சி களைச் சார்ந்த ஊராட்சி மன்றத் தலைவர் களும், கோயமுத்தூர் மாவட்டம் – வாரப்பட்டி ஊராட்சி, விழுப்புரம் மாவட்டம் – கொண் டாங்கி ஊராட்சி மற்றும் தஞ்சாவூர் மாவட் டம் – திருமலை சமுத்திரம் ஊராட்சி ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்களும் முதலமைச்சர் அவர்களுடன் கலந்துரை யாடினர்.

இக்கூட்டங்களில், மக்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான மூன்று அத்தியா வசிய தேவைகள் தேர்வு செய்யப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டன. மேலும், சமூக நல்லிணக்கத்தைக் கருத்தில் கொண்டு, இழிவுபடுத்தும் பொருள் தரும் சாதிப்பெயர் கள் கொண்ட குடியிருப்புகள், தெருக்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் பிற பொது இடங்களில் காணப்படும் பெயர்களை நீக்கி, புதிய பொருத்தமான பெயர்களைச் சூட்டுதல் குறித்து தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

‘தாயுமானவர் திட்டம்’ கீழ் பயனாளி களை அடையாளம் கண்டு, நலிவு நிலை குறைப்புத் திட்டம் தயாரித்து ஒப்புதல் பெறப்பட்டது.

மேலும் இக்கிராம சபைக் கூட்டத்தில்,

- “நம்ம ஊரு, நம்ம அரசு” என்ற தலைப்பின் கீழ் கண்டறியப்பட்ட திட்டங்கள் தேவைகள் பதிவேற்றம் செய்யப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுப்பது குறித்து,
- கிராம ஊராட்சிகளில் 1.04.2025 முதல் 30.09.2025 முடியவுள்ள காலத் திற்கு நிர்வாகம் மற்றும் பொது நிதிச் செலவினம்,
- கிராம ஊராட்சியின் 2024-25 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை,
- மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் வரவு மற்றும் பணி முன்னேற்றம்,
- அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டப் பணிகளின் முன் னேற்றம்,
- தூய்மை பாரத இயக்க (ஊரகம்) (SBM (G) 2.0) திட்டம்,
- ஊரகப் பகுதிகளில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்த எடுக்கப் பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்,
- கொசுக்கள் மூலம் பரவும் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும்,
- வடகிழக்கு பருவமழை முன் னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாகவும்,
- அனைத்து வகையான தொழில்க ளில் குழந்தைகளும் (Child Labour) மற் றும் அபாயகரமான தொழில்களில் வளரி ளம் பருவத்தினரும் இல்லை என்பது குறித்து நடவடிக்கைகள்,
- தீன்தயாள் உபாத்யாய கிராமப் புற திறன் பயிற்சி திட்டம் (DDUGKY RSETI Training) (கிராமப்புற இளைஞர்களுக்கான திறன் பயிற்சி திட்டம்) குறித்தும்,
- தேர்வு செய்யப்பட்டுள்ள 7,515 கிராம ஊராட்சிகளில் நடைபெறும் கிராம சபை குறித்த வீடியோ / ஆடியோ பதிவு களை சபாசார் இணையதளத்தில் பதிவேற் றம் செய்வது,
- 2025-26 ஆம் ஆண்டின் பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா (PMAGY) திட்டத்தில் தேர்வு செய்யப்பட் டுள்ள ஊராட்சிகளில் கிராம வளர்ச்சி திட்டம் தயார் செய்து பணிகளை மேற்கொள்ள கிராம சபையின் ஒப்புதல்

உள்ளிட்ட மொத்தம் 16 முக்கிய தீர்மா னங்கள் கிராம சபைகளில் நிறைவேற்றப் பட்டன.

மாநிலம் முழுவதும் நடைபெற்ற இக்கிராம சபைக் கூட்டங்கள், மக்களின் பங்களிப்பை ஊக்குவிக்கும் மற்றும் ஊரக வளர்ச்சியை வலுப்படுத்தும் சிறப்புமிக்க நிகழ்வாக அமைந்தன.

இக்கிராம சபைக் கூட்டங்களில் மாவட் டங்களிலிருந்து அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண் டனர்.

முதல்வர் அவர்களின் காணொலி உரை நிகழ்வில், முகாம் அலுவலகத்திலிருந்து தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் தமிழ்நாடு மின் ஆளுமை (TNeGA) நிர்வாக இயக்குநர் திருமதி. பெ.ரமண சரஸ்வதி, தலைமைச் செயலகத் திலிருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட் சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, ஊரக வளர்ச்சித்துறை ஆணையர் பா.பொன்னையா மற்றும் அரசு உயர் அலுவலர்களும் கலந்து கொண்டனர்.